தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.35/மா/2022**

**நாள். 15.06.2022**

திரு. இ. சுந்தர்,
இராணிப்பேட்டை – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
வேலூர் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

இராணிப்பேட்டை, பழைய ஆற்காடு சாலை, கதவு எண்.21/9 என்ற முகவரியில் வசிக்கும் திரு. இ. சுந்தர் என்பவரின் 26.02.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.03.2022 அன்று பெறப்பட்டு 35/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராணிப்பேட்டை, பழைய ஆற்காடு சாலை, கதவு எண்.21/9 என்ற முகவரியில் வசிக்கும் திரு இ.சுந்தர் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 26.02.2022 நாளிட்ட தனது மனுவில்,

“எனது பாட்டனார் லேட். முனிசாமி கவுண்டர் த/பெ. லேட். பொன்னுச்சாமி கவுண்டர் அவர்களுக்கு கீழ்கண்ட நபர்கள் வாரிசுதாரர்கள் ஆவார்கள். எனது தாயார் மற்றும் எனது பெரிய தாயார் உட்பட.

1. மங்கை க/பெ. (லேட்.) முனிசாமி கவுண்டர்.
2. (லேட்.)முருகன் த/பெ.(லேட்.) முனிசாமி கவுண்டர்.
3. ராதா த/பெ.(லேட்.) முனிசாமி கவுண்டர்.
4. (லேட்.) சந்திரா த/பெ.(லேட்.) முனிசாமி கவுண்டர்.
5. முனியம்மாள் த/பெ.(லேட்.) முனிசாமி கவுண்டர்.

ஆகியோர் வாரிசுதாரர்கள் ஆவார்கள். வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், விருபாட்சிபுரம் மதுராபள்ள இடையம்பட்டி சர்வே எண்.213/61–ல் உள்ள வீட்டு மனைக்கு எனது பாட்டனார் திரு.முனிசாமி கவுண்டர் பெயரில் வீட்டுவரி செலுத்தி அதற்கான ஆவணங்கள் உள்ளது. எனது பாட்டனார் முனிசாமி கவுண்டர் அவர்கள் 25.10.1987 அன்று இறந்து விட்டார். தொடர்ந்து

23.01.2004 வரை எனது பாட்டனார் பெயரில் எனது பெரிய அம்மா அவர்கள் தொடர்ந்து வரி செலுத்தி வந்தார். இந்நிலையில் வட்டாட்சியர் அலுவலகத்தில் செட்டில்மெண்டின்போது வாரிசு சான்று, மற்றும் பத்திரப்பதிவு சான்று ஏதும் இன்றி எனது மாமா (லேட்) முருகன் த/பெ. (லேட்) முனிசாமி கவுண்டர் அவர்களுக்கு முறைகேடான வகையில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது அதிகார துஷ்பிரயோகம் ஆகும். இதன் தொடர் நேர்வில் (லேட்)முருகன் மகன் செல்வராசு பெயரில் முறைகேடாக 22.11.2010 அன்று பட்டா வழங்கப்பட்டுள்ளது. முருகன் அவர்கள் எந்தவிதமான பத்திர பதிவு செய்யாத நிலையில் செல்வராசு பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. இது அதிகார துஷ்பிரயோகம் ஆகும். 23.06.2014 அன்றுதான் (லேட்) முருகன் அவர்கள் செல்வராசு பெயருக்கு தான செட்டில்மெண்ட் அளித்துள்ளார். ஆனால் 22.11.2010 அன்றே எவ்வித ஆவணங்களும் இன்றி வட்டாட்சியர் அவர்களால் பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனது பாட்டனார் (லேட்)முனிசாமி கவுண்டர் அவர்களுக்கு 5 நபர்கள் வாரிசுதாரர்கள் உள்ள நிலையில் கூட்டு பட்டா வழங்காமல் தனிநபருக்கு வாரிசு சான்றோ அல்லது எவ்வித ஆவணங்களும் இன்றி பட்டா வழங்கப்பட்டது இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கு விரோதமானது. அரசு நிலையாணை எண்.31, பட்டா பதிவு புத்தக சட்டம் 1983, தமிழ்நாடு பட்டா விவர குறிப்பு விதிகளுக்கு புறம்பாக (லேட்) முருகன் பெயருக்கும், செல்வராசு பெயருக்கும் பட்டா வழங்கியது சட்ட முறைமைகளுக்கு புறம்பானது.

இந்நிலையில் எனது பெரிய தாயார் ராதா த/பெ. (லேட்) முனிசாமி கவுண்டர் 07.02.2000 அன்று பாகாயம் காவல் நிலையத்தில் பாக பிரிவினை வழங்கவில்லை என்று புகார் மனு அளித்துள்ளார். மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 மற்றும் விதிகளின்படி வாரிசுதாரர் பெயர் மாற்றங்களுக்கு இறப்பு சான்று, வாரிசு சான்று, கிரயம், உயில், தான செட்டில்மெண்ட் இன்றி முறைகேடாக பெறப்பட்ட பட்டாவை காட்டி வரி பெயர் மாற்றம் மற்றும் டவுன் சர்வேயர் Field Registerல் அதிகாரிகளுக்கு கையூட்டு தந்து முறைகேடாக வரி மற்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது சட்ட விதிமுறைகளுக்கு புறம்பானது.

இது சம்பந்தமாக தகவல் அறியும் உரிமைச்சட்டம் –2005ன் கீழ் 27.09.2021 அன்று மூன்று இனங்களுக்கான தகவல் கோரி மாநகராட்சி அலுவலகத்துக்கு கடிதம் அனுப்பியிருந்ததில் 29.11.2021 அன்று பார்வையிட மாநகராட்சி அலுவலகம் தகவல் வழங்கியது. 29.11.2021 அன்று மாநகராட்சி பொது அலுவலர் முன்பு ஆஜராகி நான் கோரிய 3 இனங்களுள், 2 இனத்திற்கு மட்டும் ஆவணம் காண்பிக்கப்பட்டது. மற்ற 1 மற்றும் 3–வது இனத்திற்கான ஆவணம் காண்பிக்கப்படவில்லை. தங்களது தவறை மறைக்கும் வண்ணம் தீய நோக்குடன் பொது தகவல் அலுவலர், அலுவல் கடமையில் செயல்பட்டார். இதன் நேர்வில் தகவல் அறியும் சட்டத்தில் 01.11.2021 அன்று மாநகராட்சிக்கு மேல் முறையீடு செய்யப்பட்டது. அதன் நேர்வில் மேல் முறையீட்டு அலுவலர் மற்றும் மாநகராட்சி ஆணையர் 28.12.2021 அன்று அவர் அனுப்பிய கடிதத்தில் நான் பார்வையிடக் கோரிய ஆவணங்கள், மற்றும் நான் கோரிய ஆவணங்கள் தகவல் பிரிவு–8க்கு விரோதமானது அல்ல மூன்றாம் நபர் தகவலும் அல்ல காரணம், நான் (லேட்) முனிசாமி கவுண்டரின் கால் வழி வாரிசான முனியம்மாள் அவாகளின் மகனாவேன். இரத்த சம்மந்தமும், வாரிசு உரிமை மூலம் உள்ளவனாவேன். நான் கோரிய ஆவணம் பொது அதிகார அமைப்பு சாட்சிய சட்டம்–76ன் கீழ் வழங்கக்கூடிய ஆவணமாகும். தானும் தனது சார் அலுவலர்கள் செய்த தவறை மறைப்பதற்காக தீய நோக்குடன் அவரது அலுவல் கடமையில் செயல்பட்டுள்ளார். மேலும் பட்டா, வரி ரத்து செய்ய எனது பெரிய தாயார் திருமதி.ராதாம்மாள் அவர்கள் மனு அளித்தும் அரசாணை 99/2015 முப்பது நாட்களுக்குள் தீர்வோ அல்லது இடைக்கால பதிலோ அளிக்காமல் சட்ட விரோதமாக தனது அலுவல் கடமை ஆற்றியுள்ளார். அரசாணை, சட்டம், விதிமுறைகளுக்கு உட்பட்டு தனது அலுவல் கடமை ஆற்ற தவறியுள்ளார். எதிர் தரப்பினரிடம் கையூட்டு

பெற்றுக்கொண்டு தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார். அதற்கு கீழ்கண்ட அலுவலர்களும் இந்த முறைகேட்டிற்கு உடந்தையாக இருந்துள்ளனர்.

i) உமாபதி – வரி தண்டலர் – 44வது வார்டு – 3வது மண்டலம்.
ii) கதிர்வேல் – வருவாய் ஆய்வாளர் – 44வது வார்டு – 3வது மண்டலம்
iii) சுரேஷ் – பொது தகவல் அலுவலர் – 44வது வார்டு – 3வது மண்டலம்
iv) மேலாளர் மற்றும் உதவி ஆணையர் – 3வது மண்டலம் ஆகியோர் மீது அரசு ஒழுங்கு நடவடிக்கைகளின்படி நடவடிக்கை எடுக்கவும் வரி ரத்து செய்வதற்கு மாண்பமை நடுவர் மன்றம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு ஆணையர், வேலூர் மாநகராட்சி அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 05.04.2022 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது.

3) வேலூர் மாநகராட்சி ஆணையர் தனது 25.04.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" திரு இ. சுந்தர் என்பவர் முறைகேடாக வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என புகார் தெரிவித்துள்ளார். இப்புகார் தொடர்பான வேலூர் மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்.44 பள்ள இடையம்பட்டி வீட்டின் சொத்துவரி விருபாட்சிபுரம் ஊராட்சியால் விதிக்கப்பட்டது ஆகும். வேலூர் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் அதனுடன் இணைக்கப்பட்ட ஊராட்சி பகுதிகளிலிருந்து மாநகராட்சிப் பகுதியில் இணைக்கப்பட்டது தொடர்பாக ஊராட்சி அலுவலகத்திலிருந்து, புகாரில் தெரிவித்துள்ள கட்டிட வரிவிதிப்பு தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தெரிய வருவதால், மாநகராட்சி அலுவலக அளவில் கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

மாநகராட்சியில் மேற்படி ஊராட்சி பகுதி இணைந்தது முதல் மேற்படி வீட்டின் சொத்துவரி விதிப்பு எண். 035/440562–க்கு ரூ.39/– வரியாக இருந்து வருகின்றது. மேற்படி வரிவிதிப்பு வருவாய்த்துறை, பத்திரப்பதிவு துறை ஆவணம் எண்.7071/14ன்படி திரு.முருகன் என்பவர் பெயரில் இருந்து கடந்த 2015ஆம் ஆண்டு திரு.செல்வராசு என்பவர் பெயருக்கு வரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தெரிவித்துள்ளது அனைத்தும் தவறானது என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இவ்வாறான சூழ்நிலையில் திரு.இ.சுந்தர் அ/பெ.முனியம்மாள் என்பவர் திரு.முனிசாமி கவுண்டர் தனக்கு பாட்டனார் என்றும் அவருக்கு கீழ்க்கண்டவாறு வாரிசுதாரர்கள் உள்ளனர் என தெரிவித்துள்ளார்.

திரு. முனிசாமி அவர்களின் வாரிசுகள்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி மங்கை | மனைவி |
| 2. | (லேட்.)திரு.முருகன் | மகன் |
| 3. | திருமதி ராதா | மகள் |
| 4. | சந்திரா | மகள் |
| 5. | முனியம்மாள் | மகள் |

மேற்படி 5 நபர்கள் உள்ள நிலையில் வட்டாட்சியர் அலுவலகத்தால் முறைகேடாக பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். பட்டா பெயர் மாற்றம் செய்யும் பணி

ஏதும் மாநகராட்சி அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவது இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. திருமதி. ராதா என்பவரால் பள்ள இடையம்பட்டி கதவு எண்.286 கொண்ட வீடு என தெரிவித்து புதிய வரிவிதிப்பு செய்து தர கடந்த 2018ஆம் ஆண்டு கோரியுள்ளார். அதாவது வேலூர் மாநகராட்சியால் சொத்து வரி விதிப்பு கடந்த 2015 ஆம் ஆண்டில் வரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்னர் திரு செல்வராசு என்பவரால் மேற்படி சொத்து தொடர்பாக O.S. No. 108/2016–ன்படி வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்த நிலையில் வரிவிதிப்பு செய்ய கோரியுள்ளார். மேற்படி கதவு எண்.286 கொண்ட வீட்டிற்கு இதே பகுதியில் திரு முருகேசன் என்பவர் பெயரில் வரிவிதிப்பு 00605 என்ற எண்ணில் இருந்து வருகிறது.

மனுதாரர் திரு இ.சுந்தர் அவர்களுக்கோ (லேட்) திரு.முருகன் அவரை தவிர்த்து இதர வாரிசுதாரர்கள் 4 நபர்களுக்கோ சம்மந்தப்பட்ட வரிவிதிப்பு செய்யப்பட்ட சொத்து உரிமையானது என (Registered Document) பத்திரப்பதிவு துறையில் பதிவு செய்யப்பட்ட பத்திரம் மற்றும் வருவாய் துறையின் சொத்துரிமை மாற்றம் செய்யப்பட்டதற்கான ஆவணங்களை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கும்பட்சத்தில் ஆவணங்களை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மாநகராட்சி மேற்கொள்ளும். சொத்து உரிமை சம்மந்தமாக ஏற்கனவே மாநகராட்சியில் வரிவிதிப்பு செய்யப்பட்டவருக்கும் புதிதாக வரிவிதிப்பு கோரும் மனுதாரருக்கும் இடையே O.S.No.108/2016– வழக்கு O.S. No.142/2019–ன்படி நில ஆர்ஜித சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளதாக திரு செல்வராசு என்பவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்தின் மீது வழக்கு நிலுவையில் இருப்பதால் புதிதாக வரிவிதிப்பு செய்ய வழிவகை இல்லை. மேற்படி தகவல்கள் அனைத்தும் திரு இ.சுந்தர் என்பவருக்கு 09.03.2022 அன்று தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்களின் அடிப்படையில் திரு இ.சுந்தர் என்பவரின் புகாரானது குடும்ப சொத்துரிமை தொடர்புடையது ஆகும். இதில் மாநகராட்சி மற்றும் அதன் பணியாளர்களால் எந்தவித தவறும் நடைபெறவில்லை. எனவே சொத்தின் மீதான உரிமை குறித்து நிலுவையில் உள்ள வழக்கு O.S.No.142/2019 மற்றும் திருமதி. ராதா என்பவரால் பட்டா ரத்து செய்ய கோரி கோட்டாட்சியருக்கு செய்துள்ள மனுக்கள் மீது உரிய உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அதன் அடிப்படையில் மாநகராட்சி மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 12.05.2022 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 28.04.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

5) மனுதாரர் 12.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம் விருபாட்சிபுரம் மதுரா பள்ள இடையம்பட்டி பழைய கதவு எண்.5/53B புதிய கதவு எண் 286 சர்வே எண். 213/61ல் உள்ள வீட்டு மனைக்கு எனது பாட்டனார் திரு.முனிசாமி கவுண்டர் பெயரில் 1980 முதல் 2004 வரை வீட்டு வரி செலுத்தி வந்துள்ளார். ஆனால் தற்போது எனது மாமா முருகன் முறைகேடாக பெறப்பட்ட பட்டாவைக்கொண்டு அவரது மகனான திரு செல்வராசு மாநகராட்சியை அணுகி தனது பெயரில் முறைகேடாக சொத்துவரி பெயர் மாற்றம் செய்துள்ளார். எனவே முறைகேடான பட்டாவைக்கொண்டு செய்யப்பட்ட சொத்து வரி பெயர் மாற்றத்தை ரத்து செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது 12.05.2022 நாளிட்ட கூடுதல் விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) வேலூர் மாநகராட்சி உதவி ஆணையரும், வருவாய் ஆய்வரும் 12.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

“ வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், விருபாட்சிபுரம், பள்ள இடையம்பட்டி வரிவிதிப்பு எண். 035/440562, 2011ல் மாநகராட்சியுடன், ஊராட்சியை இணைத்த பின்னர், திரு.முருகன் என்பவரின் பெயரில் வரிவிதிப்பு இருந்து வந்துள்ளது. திரு.முருகன் என்பவர் மேற்கண்ட வரிவிதிப்பு கொண்ட சொத்தினை தனது மகன் செல்வராசு என்பவருக்கு 2014ம் ஆண்டு தான செட்டில்மென்ட் செய்ததையடுத்து, தான செட்டில்மென்ட் நகலினை மாநகராட்சியில் சமர்ப்பித்து தனது பெயரில் வீட்டு வரிவிதிப்பை மாற்றிக்கொண்டார் என்கின்ற விவரத்தையும், தற்போது வரை மேற்கண்ட திரு.செல்வராசு என்பவரின் பெயரிலேயே வீட்டு வரி வசூலிக்கப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தையும், ஆவணங்களின் அடிப்படையில் சொத்து வரி பெயர் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இந்நேர்வில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேற்கண்ட திரு.செல்வராசு என்பவரால் மாநகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தான செட்டில்மென்ட் பத்திரத்தின் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். மேற்படி சொத்துவரி பெயர் மாற்றம் அடைந்த வீட்டின் சொத்துரிமை தொடர்பாக மனுதாரரின் பெரியம்மா ராதா என்பவருக்கும் மேற்கண்ட திரு.செல்வராசு ஆகியோருக்கிடையே வழக்கு ஒன்று 2016 முதல் நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்” என தெரிவித்துள்ளனர்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வேலூர் மாநகராட்சி உதவி ஆணையர், வருவாய் ஆய்வர் அவர்களின் வாக்குமூலம், ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தனது மாமா முருகன் முறைகேடாக பெறப்பட்ட பட்டாவைக்கொண்டு அவரது மகனான திரு செல்வராசு மாநகராட்சியை அனுகி செல்வராசு பெயரில் முறைகேடாக சொத்துவரி பெயர் மாற்றம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

i) மாநகராட்சிக்கு கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் வீட்டின் சொத்து வரி விதிப்பு எண.035/4400562க்கு ரூ.39/– வரியாக இருந்து வருகின்றது. மேற்படி வரிவிதிப்பு வருவாய்துறை, பத்திரப்பதிவுதுறை ஆவணம் எண். 7071/14ன்படி திரு.முருகன் என்பவரின் பெயரில் இருந்து திரு.செல்வராசு என்பவர் பெயருக்கு 2015ஆம் ஆண்டு வரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ii) திருமதி. ராதா என்பவர் பள்ள இடையம்பட்டி கதவு எண்.286 கொண்ட வீட்டிற்கு புதிய வரிவிதிப்பு செய்து தர 2018ஆம் ஆண்டு கோரியுள்ளார். 2015ஆம் ஆண்டில் வரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்னர் திரு.செல்வராசு மேற்படி சொத்து தொடர்பாக O.S. No.108/2016ன்படி வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்த நிலையில் வரிவிதிப்பு செய்ய கோரியுள்ளார். மேற்படி கதவு எண்.286 கொண்ட வீட்டிற்கு இதே பகுதியில் திரு.முருகேசன் என்பவர் பெயரில் வரிவிதிப்பு 00605 என்ற வரிவிதிப்பு எண் உள்ளது என்பதையும் ஆணையரின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

iii) சொத்து உரிமை சம்மந்தமாக ஏற்கனவே மாநகராட்சியில் வரிவிதிப்பு செய்யப்பட்டவருக்கும் புதிதாக வரிவிதிப்பு கோரும் மனுதாரருக்கும் இடையே O.S.No.108/2016–ம்படியான வழக்கு O.S. No.142/2019–ன்படி நில ஆர்ஜித சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளதாக திரு செல்வராசு தெரிவித்துள்ளார்.

iv) மனுதாரர் திரு இ.சுந்தர் அவர்களுக்கோ (லேட்) திரு.முருகன் அவரை தவிர்த்து இதர வாரிசுதாரர்கள் 4 நபர்களுக்கோ சம்மந்தப்பட்ட வரிவிதிப்பு செய்யப்பட்ட சொத்து உரிமையானது என (Registered Document) பத்திரப்பதிவு துறையில் பதிவு செய்யப்பட்ட பத்திரம் மற்றும் வருவாய் துறையின் சொத்துரிமை மாற்றம் செய்யப்பட்டதற்கான ஆவணங்களை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கும்பட்சத்தில் ஆவணங்களை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கையை மாநகராட்சி மேற்கொள்ளும் என ஆணையரும் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

v) மேற்கண்ட ஆவணங்களின் அடிப்படையில் திரு இ.சுந்தர் என்பவரின் புகாரானது குடும்ப சொத்துரிமை தொடர்புடையது ஆகும். எனவே சொத்தின் மீதான உரிமை குறித்து நிலுவையில் உள்ள வழக்கு O.S.No.142/2019 மற்றும் திருமதி. ராதா என்பவரால் பட்டா ரத்து செய்ய கோரி கோட்டாட்சியருக்கு செய்துள்ள மனுக்கள் மீது உரிய உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அதன் அடிப்படையில் மாநகராட்சி மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆணையர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் சொத்து உரிமை குறித்து வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. நீதிமன்றமொன்றில் வழக்கு நிலுவையில் உள்ள இனங்களை பிரிவு 10(3) (b), தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம், 2014 (தமிழ்நாடு சட்டம் 27 of 2014)ன்படி இம்முறைமன்ற நடுவம் விசாரணை செய்தல் கூடாது. இருப்பினும், இந்நேர்வில் வரிவிதிப்பு வருவாய்த்துறை பத்திரப்பதிவு துறை ஆவணம் எண். 7071/14–ன்படி திரு.(லேட்) முருகன் என்பவர் பெயரில் இருந்து கடந்த 2015ஆம் ஆண்டு திரு.செல்வராசு என்பவர் பெயருக்கு வரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும், இது தொடர்பான ஆவணங்களை பரிசீலனை செய்ததில் 22.11.2010 அன்றே அதாவது திரு.செல்வராசு பெயருக்கு திரு.(லேட்) முருகன் அவர்கள் தான செட்டில்மெண்ட் செய்தவற்கு முன்பாகவே திரு.செல்வராசு பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது முரண்பாடான செயலாக உள்ளது.

எனவே, இந்நேர்வில் திரு.செல்வராசு அவர்களை சொத்தின் உரிமை மாற்றம் செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் அதாவது திரு. முருகன், த/பெ. (லேட்) முனிசாமி கவுண்டர் என்பவருக்கு சொத்துரிமை மாற்றம் செய்வித்த பத்திரம் மற்றும் மூல ஆவணத்தை நான்கு வார காலகெடுவுக்குள் வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்க திரு.செல்வராசு அவர்களுக்கு மாநகராட்சி மூலம் அறிவிப்பு வழங்கவும், அவ்வாறு அறிவிப்பு வழங்கிய காலக்கெடுவுக்குள் ஆவணங்களை சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில் திரு. செல்வராசு சொத்து வரிவிதிப்பு ரத்து செய்ய தக்க நடவடிக்கை எடுத்திட ஆணையர், வேலூர் மாநகராட்சி அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும், 23.06.2014 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தில் வேலூர் மாவட்டம், வேலூர் பதிவு மாவட்டம் , வேலூர் சப்டிவிசன், வேலூர் வட்டம், விருபாட்சிபுரம், சர்வே எண். 213/61, ல் பள்ளஇடையம்பட்டி, பிள்ளையார் கோவில் தெருவில் மேற்சொன்ன விபரப்படிக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்ததான கதவு எண். 286, 287 உள்ள சொத்தை இன்று திரு. செல்வராசுக்கு செட்டில் மெண்ட் செய்துக் கொடுத்து விட்டேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் 9.3.2022 நாளிட்ட

வேலூர் மாநகராட்சி, தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ், வழங்கிய பதிலில் கதவு எண் 286 கொண்ட வீட்டுவரி திரு. முருகேசன் என்பவர் பெயரில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கையில் கதவு எண். 286 கொண்ட வீட்டிற்கு 2014ல் செல்வராசு பெயருக்கு செட்டில்மெண்ட் செய்து கொடுத்த பிறகும் எவ்வாறு திரு. முருகேசன் பெயருக்கு வரிவிதிப்பு செய்யப்பட்டது என தெரியவில்லை. இதனை முழுமையாக விசாரணை செய்து 30 நாட்களுக்குள் மனுதாரர் புகாரில் தெரிவித்த சொத்துவரி சம்பந்தமாக தக்க நடவடிக்கைள் எடுத்திட வேலூர் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேற்சொன்ன நடவடிக்கையில் எடுக்கப்படும் முடிவுகள் இந்நேர்வில் குறிப்பிடப்படும் சொத்தின் மீதான உரிமை குறித்து நிலுவையில் உள்ள வழக்கு O.S. No.142/2019ன் தீர்ப்புக்குட்பட்டது என்பதை அவ்வாறு வெளியிடப்படும் ஆணையில் குறிப்பிடுமாறு வேலூர் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 15–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள், முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. இ. சுந்தர்,
த/பெ. இளங்கோவன்,
21/9, பழைய ஆற்காடு சாலை,
இராணிப்பேட்டை – 632 401.

2) ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்.

3) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

15/6/22
செயலாளர்
15.6.2022